**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, MUDUKULATHUR**

CC.No.74/2025
Prosecution witness.01

| | |
|---|---|
| பெயர் : பூர்ணவள்ளி | தொழில் : |
| தந்தை/கணவர் பெயர் : சிலம்பரசன் | கிராமம் : |
| வயது : | தாலுகா : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths act, 1969 (Central Act 44 of 1969)

12.02.2026

(எதிரி ஆஜர்).

சாட்சி ஆஜர். சாட்சி அசல் ஆதார் அடையாள அட்டையை சரிபார்த்தும் இவர் தான் சாட்சி சொல்லும் நபர் என்று நீதிமன்றம் போலிசார் சாட்சியை அடையாளம் செய்து உறுதி செய்த பின்பு சாட்சியம் அளிக்கிறார். (ஆதார் அடையாள அட்டை நகல் பெறப்பட்டது).

**முதல் விசாரணை**

நான் செல்லூரியில் குடியிருந்து இல்லத்தரசியாக உள்ளேன். ஆஜர் எதிரி எனது கணவர் தான். அவருக்கும் எனக்கும் எவ்வித முன்விரோதமும் கிடையாது. போன வருடம் ஒரு நாள் இரவு 10.00 மணியளவில் நான் எனது வீட்டில் இருந்தபோது வீட்டிற்கு வெளியே சுமார் 10, 15 நபர்களுக்கு மேல் கூட்டமாக நின்று சண்டை போட்டுக் கொண்டிருந்தார்கள். அப்போது என்னவென்று சென்று பார்த்தபோது கூட்டத்தில் நடந்த நெரிசலில் கீழே விழுந்து எனக்கு காயம் ஏற்பட்டது. எனக்கு ஏற்பட்ட காயத்திற்கு பரமக்குடி அரசு மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை பெற்றேன். நான் சிகிச்சையில் இருந்தபோது போலிசார் வந்து என்னிடம் வெள்ளைத்தாளில் கையொப்பம் பெற்றுக்கொண்டார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்திலுள்ள கையொப்பம் என்னுடையது தான். புகார் வாக்குமூலத்தில் என்ன சங்கதிகள் உள்ளது என்று எனக்கு தெரியாது. **அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வேண்டியதன் பெயரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்குவிசாரணை செய்யப்படுகிறார்).

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1) கடந்த 02.04.2025ம் தேதி இரவு 10.30 மணியளவில் நான் வீட்டில் எனது அம்மாவுடன் இருந்தபோது ஆஜர் எதிரியான எனது கணவர் வீட்டிற்கு வந்து என்னை அறைக்குள் தள்ளி ஆபாசமாக திட்டி என்னை அடித்தார் என்றால் சரியல்ல. நான் வலி தாங்க முடியாமல் ரூம் கதவை திறந்து வெளியே வந்தபோது எனது கணவர் வெளியே ஓடி வந்து என்னை கீழே தள்ளி அருகில் இருந்த கம்பியை எடுத்து எனது முதுகில் அடித்து ஆபாசமாக பேசி, நான் மகப்பேறு அறுவை சிகிச்சை செய்திருந்தபோது எனது வயிற்றிலும், பிறப்பு உறுப்பிளும் மிதித்தார் என்றாலும், நான் வலி தாங்க முடியாமல் சத்தம் போடவும் அருகில் இருந்த எனது அம்மா, மாமனார் ராஜாங்கம் வந்து சண்டையை விலக்கியபோது எதிரி அவர் வைத்திருந்த கம்பியை காட்டி என்னை கொலைமிரட்டல் விடுத்தாக புகார் வாக்குமூலத்திலும், போலிசார் விசாரித்தபோதும் கூறிவிட்டு எதிரி எனது கணவர் என்பதால் எதிரியுடன் சமாதானமாக சென்றுவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

இல்லை.